| Register Number | | | | | | |
|---|---|---|---|---|---|---|

# பகுதி I — தமிழ் — முதல் தாள்

( செய்யுளும், இலக்கணமும் )

# Language — Part I — TAMIL — Paper I

( New Syllabus )

நேரம் : 3 மணி ] [ மொத்த மதிப்பெண்கள் : 100

*குறிப்பு* : 1) விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினவாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

2) வினா எண் VI க்கான விடை மட்டும் செய்யுள் வடிவில் அமைதல் வேண்டும்.

I. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***நான்கனுக்கு*** ஒவ்வொன்றுக்கும் *ஐந்து வரிகளில்* விடை எழுதுக : 4 × 2 = 8

1. புறநானூற்றால் அறியப்படும் செய்திகள் யாவை ?
2. உருவுகண்டு எள்ளாமை வேண்டும் - ஏன் ?
3. நாம் தூங்கிக் கிடந்ததால் நடந்ததாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை ?
4. பாவேந்தர் நூல்களுள் நான்கின் பெயர்களை எழுதுக.
5. சிறுவர்களுக்குக் காகிதக் கப்பல் விட ஒய்வில்லாதது ஏன் ?
6. தேவார மூவரின் பெயர்களை எழுதுக.

[ Turn over

II. பின்வரும் வினாக்களுள் எவையேனும் ***மூன்றனுக்கு,*** ஒவ்வொன்றுக்கும் *பத்து வரிகளில்* விடை எழுதுக : $3 \times 4 = 12$

7. வரத நஞ்சையப் பிள்ளை எக்காரணங்களால் தமிழை வாழ்த்துவம் என்று கூறுகிறார் ?

8. தலைவன் வரைவு நீட்டித்த விடத்துத் தலைமகள் தோழிக்குக் கூறியதாக வரும் குறுந்தொகைப் பாடற் கருத்தை விளக்குக

9. நன்றி செய்தாரது நட்பினை விடலாகாது - குறட்பா வழிநின்று விளக்குக.

10. தாவீதன் கோலியாத்தினை வென்றமை யாங்ஙனம் ?

11. கணையாழி கண்ட சீதையின் செயல்கள் யாவை ?

III. பின்வரும் வினாக்களுக்குள் எவையேனும் ***மூன்றனுக்கு***, *பத்து வரிகளில்* விடை எழுதுக: $3 \times 4 = 12$

12. இராசராச சோழனின் வில், வாள், முரசு, கொடி, குடை குறித்து உலா கூறுவன யாவை ?

13. தென்கரை நாட்டின் வளம் குறித்து முக்கூடற்பள்ளு உரைப்பனவற்றை எழுதுக.

14. சுவடிச் சாலையில் இருக்க வேண்டிய நூல்கள் குறித்துப் பாவேந்தர் உரைப்பனவற்றை எழுதுக.

15. கவிஞர் சுரதா எவ்வெவற்றைச் சிக்கனம் எனப் பட்டியலிட்டுள்ளார் ?

16. நயினார் பதத்துணையை நாவில் வைத்துப் போற்றுபவர் அடையத் தக்கனவாக உமறுப்புலவர் கூறுவன யாவை ?

IV. பின்வரும் வினாக்களுள் ஏதேனும் ***ஒன்றனுக்கு*** *இருபது வரிகளில்* விடை எழுதுக. $1 \times 8 = 8$

17. அறிவுடைமை அதிகாரத்தில் இடம் பெற்ற குறட்பாக்களின் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

18. கண்ணகியின் சூளுரையும் நகரமாந்தர் மயங்கிக் கூறியனவும் யாவை ?

19. காடு என்ற தலைப்பின் கீழ்க் கவிஞரேறு வாணிதாசன் உரைப்பனவற்றை எழுதுக.

V. பின்வரும் செய்யுளின் கீழ்க் கொடுக்கப்பட்ட வினாக்களுக்கு விடை எழுதுக. $4 \times 1 = 4$

20 ''வெஞ்சின விறல்வேற் காளையொ

டஞ்சி லோதியை வரக்கரைந் தீமே''

அ) இச்செய்யுட் பகுதி இடம்பெற்ற நூல் எது ?

ஆ) அஞ்சிலோதி என்று செய்யுள் யாரைக் குறிக்கிறது ?

இ) இவ்வரிகள் யார் கூற்று ?

ஈ) இச்செய்யுளின் ஆசிரியர் யார் ?

அல்லது

21. ''அலங்குதண் சோலை புக்கேன் அவ்வழி அணங்கன் னாளைக்

கலங்குதெண் டிரையிற் றாய கண்ணினீர்க் கடலிற் கண்டேன்''

அ) இஃது யார், யாரிடம் கூறிய கூற்று ?

ஆ) இக்கூற்றமைந்த நூல் எது ?

இ) 'அணங்கன் னாள்' என்று குறிக்கப்பட்டவள் யார் ?

ஈ) 'சோலை புக்கேன்' என்று கூறியவன் யார் ?

VI. 22. ''கண்டனென்'' என்று தொடங்கும் கம்பராமாயணச் செய்யுளை அடிபிறழாமல் எழுதி அதன் பாவகையையும் எழுதுக. $4 + 2 = 6$

23. 'சொல்லுதல்' என்று தொடங்கும் குறட்பாவையும் 'அரிது' என்று முடியும் குறட்பாவையும் அடிபிறழாமல் எழுதுக. $2 + 2 = 4$

VII. 24. எவையேனும் இரண்டு சொற்களுக்கு உறுப்பிலக்கணம் தருக. $2 \times 2 = 4$

அ) ஓம்புமின் ஆ) மறவற்க இ) முழங்கிய

ஈ) புனைந்தோம் உ) ஆடுகின்ற ஊ) விடுவார்.

[ Turn over

25. கீழ்க் கோடிட்டவற்றுள் எவையேனும் ***மூன்றனுக்கு*** இலக்கணக் குறிப்பு எழுதுக. $3 \times 2 = 6$

அ) அடி<u>வாழ்த்துவம்</u> ஆ) <u>கயன்முள்</u> என்ன

இ) <u>ஒழுகுநீர்</u> ஆரல் ஈ) <u>தீது ஓரீஇ</u>

உ) <u>தாமரைக்கண்கள்</u> ஆர ஊ) <u>சோணாடு</u> வாழ.

26. எவையேனும் ***இரண்டு*** தொடர்களுக்குப் புணர்ச்சி விதி தருக. $2 \times 2 = 4$

அ) முதுமரம் ஆ) நன்றன்று இ) காற்சிலம்பு

ஈ) வறுமையுற்று உ) பூஞ்சோலை ஊ) நின்னருள்.

27. சான்று தந்து விளக்குக. $1 \times 4 = 4$

பொதுவியல் திணை *அல்லது* வினைமுற்றிய தலைமகன் தேர்ப்பாகற்குச் சொல்லிய துறை.

28. ''இன்மை யுளின்மை விருந்தொரால் வன்மையுள்

வன்மை மடவார் பொறை''

இச்செய்யுளில் இடம்பெற்ற அணியை விளக்குக.

அல்லது

சொற்பொருட் பின்வருநிலையணி அல்லது உவமையணியை விளக்குக. $1 \times 4 = 4$

VIII. பொருத்துக. $4 \times 1 = 4$

| | | |
|---|---|---|
| 29. மணிமேகலை | — | கிருஷ்ணப் பிள்ளை |
| 30. தேவாரம் | — | உமறுப்புலவர் |
| 31. சீறாப்புராணம் | — | சீத்தலைச் சாத்தனார் |
| 32. இரட்சணிய யாத்திரிகம் | — | சுந்தரர் |
| | | குணங்குடி மஸ்தான். |

IX. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக. 16 × 1 = 16

33 சோழநாட்டுத் திருவழுந்தூரில் பிறந்தவர்

அ) கம்பர்

ஆ) ஒட்டக் கூத்தர்

இ) இளங்கோவடிகள்.

34. ''கத்தியின்றி ரத்தமின்றி யுத்தமொன்று வருகுது'' என்று பாடியவர்

அ) பாரதிதாசன்

ஆ) பாரதியார்

இ) நாமக்கல் கவிஞர் இராமலிங்கனார்.

35. அகப்புறப் பாடல்களைக் கொண்ட நூல்

அ) அகநானூறு

ஆ) பரிபாடல்

இ) புறநானூறு.

36. அகநானூற்றில் 1,3 என ஒற்றைப் படை எண்களாக வருவன பின்வரும் திணையைச் சார்ந்தவை

அ) பாலை

ஆ) குறிஞ்சி

இ) முல்லை.

37. அறத்துப் பாலில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

அ) இருபத்தைந்து

ஆ) முப்பதெட்டு

இ) எழுபது.

[ Turn over

38. "தேனிலே ஊறிய செந்தமிழின் சுவைதேறும் சிலப்பதிகாரம்" என்று பாராட்டிப் பாடியவர்

அ) பாரதியார்

ஆ) பாரதிதாசனார்

இ) கவிமணி தேசிக விநாயகம்.

39. திருக்குறளின் அறத்துப்பால், பொருட்பால் இரண்டையும் இலத்தீன் மொழியில் மொழிபெயர்த்தவர்

அ) ஜி. யு. போப்

ஆ) வீரமாமுனிவர்

இ) கால்டுவெல்.

40. பாவேந்தருக்குச் சாகித்ய அகாதெமிப் பரிசைப் பெற்றுத் தந்த நூல்

அ) பாண்டியன் பரிசு

ஆ) பிசிராந்தையார் நாடகம்

இ) சேரதாண்டவம்.

41. சொற்றொடர் நிலை என்று வழங்கப்படுவது

அ) உலா

ஆ) அந்தாதி

இ) கலம்பகம்.

42. தமிழில் தோன்றிய முதல் கலம்பகம்

அ) மதுரைக் கலம்பகம்

ஆ) காசிக் கலம்பகம்

இ) நந்திக் கலம்பகம்.

43. உவமைக் கவிஞர் என்று பாராட்டப்பட்டவர்

அ) சுப்பிரமணிய பாரதி

ஆ) சுரதா

இ) கண்ணதாசன்.

44. பாஞ்சாலி சபதத்தில் உள்ள சருக்கங்களின் எண்ணிக்கை

அ) ஐந்து

ஆ) ஏழு

இ) ஒன்பது.

45. சுந்தரர் தேவாரம்

அ) முதலாம் திருமுறை

ஆ) ஏழாம் திருமுறை

இ) பன்னிரண்டாம் திருமுறை.

46. கடிகை முத்துப் புலவரின் மாணவர்

அ) உமறுப் புலவர்

ஆ) எச். ஏ. கிருஷ்ணப்பிள்ளை

இ) வீரமாமுனிவர்.

[ Turn over

47. சிலப்பதிகாரத்தின் உட்பிரிவு

அ) படலம்

ஆ) இயல்

இ) காதை.

48. நல்லாசிரியருக்கான டாக்டர் இராத. கிருஷ்ணன் விருது பெற்றவர்

அ) பாரதிதாசன்

ஆ) வாணிதாசன்

இ) தாராபாரதி.

X. கோடிட்ட இடங்களை ஏற்ற சொற்களால் நிரப்புக : $2 + 2 = 4$

49. வினைத்திட்பம் என்ப தொருவன் .................

மற்றைய ................. பிற.

50. மறவற்க மாசற்றார் ................. துறவற்க

துன்பத்துள் துப்பாயார் ................. .